# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009*, பெப்புருவரி மாதம் *20* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச. வ. ஓ. 62/2007*

**2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(1) "இலங்கைப் பிரசை ஒருவர் என்ற அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கைப் பிரசை ஒருவர் என்ற அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அதன் காப்பு வாசகத்தை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் :-

"ஆயின் எவ்வாறாயினும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று மேலே குறிப்பீடுசெய்யப்படும் நிரந்தரவாசியொருவர் இந்திய கடவுச்சீட்டொன்றை அல்லது அதையொத்த வேறு ஆவணத்தை வைத்திருக்கின்றவிடத்து, இலங்கைப் பிரசையொருவருக்கான அத்தகைய ஆளின் அந்தஸ்து அட்டவணையில் தரப்பட்டுள்ள விசேட வெளிப்படுத்துகை படிவத்தில் இலங்கைப் பிரசாவுரிமையை தன்னிச்சையாகக்கொள்வதற்கான அவரது உட்கருத்தைத் தெரிவித்து வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளருக்கு அவர் அனுப்பிவைத்து, அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்டுள்ளதாக ஆணையாளரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மீது மாத்திரமே பயனுடையதாக வருதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்.

*“குறித்தசில ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல்.*

2அ. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் 1964 ஆம் ஆண்டு ஒற்றோபர் 30 ஆந் தேதியிலிருந்து இந்திய வம்சாவழியின ரான இலங்கையில் நிரந்தரவாசியாக வசித்தவரும் அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட சூழ்நிலை காரணமாக –

(அ) இலங்கையை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டவரும் ; அத்துடன்

(ஆ) அதன்மேல் இந்தியாவில் வதிந்துள்ளவரும்,

அத்துடன் அதன்விளைவாக இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் முந்திய நாளன்று 2 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக இயலாதவரும் 1964 ஆம் ஆண்டு ஒற்றோபர் 30 ஆந் தேதியிலிருந்து இந்திய வம்சாவழியினரான இலங்கையில் நிரந்தரவாசி யொருவராக வசித்தவரென அல்லது 1964 ஆம் ஆண்டு ஒற்றோபர் 30 ஆந் தேதியிலிருந்து இந்திய வம்சாவழியினரான இலங்கையில் நிரந்தரவாசி யொருவராக வசித்துள்ளவரான ஆளின் சந்ததியினரென எண்பிப்பை சமர்ப்பிப்பதற்கு இயலுமானவராயின் அத்தகைய ஆள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையின் ஏனைய பிரசைகள் சட்டத்தினால் எந்த உரிமைகளுக்கும் சிறப்புரி மைகளுக்கும் உரித்துடையவர்களாயிருக்கின் றனரோ அந்த எல்லா உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டம் நடை முறைக்குவரும் திகதியன்று மேற்குறிப்பீடுசெய்யப் படும் நிரந்தரவாசியொருவர் இந்திய

கடவுச்சீட்டொன்றை அல்லது அதையொத்த வேறு ஆவணத்தை வைத்திருக்கின்றவிடத்து இலங்கைப் பிரசையொருவருக்கான அத்தகைய ஆளின் அந்தஸ்து அட்டவணையில் தரப்பட்டுள்ள விசேட வெளிப்படுத்துகைப் படிவத்தில் இலங்கைப் பிரசாவுரிமையை தன்னிச்சையாகக்கொள்வதற்கான அவரது உட்கருத்தைத் தெரிவித்து வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளருக்கு அவர் அனுப்பிவைத்து, அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்டுள்ளதாக ஆணையாளரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மீது மாத்திரமே பயனுடையதாக வருதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :-

(1) "இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இரண்டாம் பிரிவு அல்லது 2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(2) "படிவத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிவத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்திற்கு உரித்துடையவராகும் எவரேனும் ஆள், இலங்கையில் நிரந்தரமாக வதியும் உட்கருத்துடன் இலங்கைக்கு அவர் வருகைதருவதன்மீது மாத்திரமே இச்சட்டத்தின்கீழ் பிரசாவுரிமைச் சான்றிதழொன்றுக்கென விண்ணப்பிக்க வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்